**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213050

1. District மாவட்டம் : நாமக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு, நாமக்கல் Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 6/AC/2024 Date: நாள் 25-10-24

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7,
   (ii) Act சட்டம்: (Amendment) Act, 2018 r/w Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 Sections பிரிவுகள்: 106
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 23.10.2024 Date to நாள் வரை மாலை 16.05 மணிக்கு முன்பு.
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.10.2024 Time நேரம் : காலை 10.00 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி-3 25-10-2024 Time நேரம் : காலை 10.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு திரு.S. வெங்கடேசன், அலுவலக அறை, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.சுபாஷினி
   (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் திரு.முருகேசன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 16.12.1988
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் துணைக் காவல் கண்காணிப்பாளர்
   (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு.ரா. முத்துசாமி (வ-44) த/பெ. ராமசாமி, உதவியாளர்/பொறுப்பு சார்பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் மற்றும் 6 நபர்கள் (விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91 நாள்: 25.10.2024-ன் மேல் ஆவணமாக்கப்படுகிறது.

10. Total value of properties stolen / Involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது ✓ / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 25/10/24. | [signature] 25/10/24.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.10.2024 அன்று 11.45 மணி.

Name: பெயர் மு. சிவாஜினி
Rank: நிலை ......................No. எண் ......
இணைக் காவல் கண்காணிப்பாளர்,
உ.ஊ.த.த. பிரிவு, நாமக்கல்

**<u>நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.6/AC/2024, u/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w. 106 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-7 இன் தொடர்ச்சி.,</u>**

**எதிரிகளின் பட்டியல்:**

1) திரு.ரா.முத்துசாமி (வயது-44/2024), த/பெ.ராமசாமி, உதவியாளர் / பொறுப்பு சார்பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் (குடியிருப்பு: கதவு எண்.89 வி.புதுப்பாளையம், ஜேடர்பாளையம்-அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்).

2) திரு.க.அன்பழகன் (வயது-42/2024), த.பெ.கண்ணுபையன், கதவு எண்.3/185 பனங்காடு, பழைய புளியம்பட்டி, சித்தாளந்தூர், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

3) திரு.சி.அரசு (வயது-62/2024), த.பெ.சின்னாக்கவுண்டர், கதவு எண்.25ஏ மாவெலிபாளையத்தான் காடு, சங்ககிரி R.S., சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.

4) திரு.ர.லோகநாதன் (வயது-37/2024), த.பெ.ரவி, கதவு எண்.1/67 எஸ்.கே.பி நகர், வெங்கடாசலம் காம்ப்ளக்ஸ், ஒட்டமெத்தை, பள்ளிபாளையம் அக்ரஹாரம்-அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

5) திரு.தி.பிரபு (வயது-40/2024), த.பெ.தியாகராஜன், கதவு எண்.7 3-வது தெரு, நெசவாளர் காலனி, கோழிக்கால்நத்தம் ரோடு, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்

6) திரு.ஏ.ரஞ்சித்குமார் (வயது-28/2024), த.பெ.ஏழுமலை, அசிஸ்டெண்ட், சிவம் அசோசியேட்ஸ், அம்மாபாளையம், சேலம்-5. (குடியிருப்பு: கதவு எண்.222 மாரிமுத்துகவுண்டர் தெரு, சின்னபுதூர், சேலம் மாவட்டம்).

7) திரு.சு.வெங்கடேசன் (வயது-58/2024), த.பெ.சுப்பிமணியன், முன்னாள் உரிமம் பெற்ற பத்திர எழுத்தர், தற்போது டைப்பிஸ்ட், நரசிம்மா காம்ப்ளக்ஸ் முதல் மாடி, மேற்கு ரதவீதி, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் (குடியிருப்பு: கதவு எண்.9/1 எஸ்.என்.டி. ரோடு கிராஸ்-3, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்).

**<u>நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.6/AC/2024, u/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w. 106 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-12 இன் விபரம்:-</u>**

நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான் 23.10.2024 ஆம் தேதி புதன்கிழமை மாலை 16.00 மணி முதல் 24.10.2024 ஆம் தேதி காலை 05.00 மணிவரை நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டிலிருந்து ஈரோடு செல்லும் சாலை, தெப்பக்குளத்தெரு, அண்ணாசிலை அருகில் உள்ள திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, அண்ணாசிலை அருகில், மேற்கு ரத வீதி, நரசிம்மா காம்ப்ளக்சின் முதல் மாடியில் செயல்பட்டுவரும் திரு.S.வெங்கடேசன், முன்னாள் பத்திர எழுத்தரின் அலுவலக அறை ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 25.10.2024 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.6/AC/2024, u/s 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w. 106 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 வழக்கின் விபரம் பின்வருமாறு.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் திருச்செங்கோடு சார்பதிவாளர் மற்றும் அவருடைய அலுவலர்கள் பத்திரப்பதிவு, வில்லங்க சான்று அளித்தல், பத்திர நகல் அளித்தல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள், பத்திர எழுத்தர்கள் மூலமாகவும், அலுவலக நேரத்திலும் அதற்கு பின்னரும் 23.10.2024 ஆம் தேதியன்று கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த இரகசிய தகவலின் அடிப்படையில் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான் அரசு சாட்சிகள் திரு. ம. கோவிந்தசாமி, தனி வட்டாட்சியர், குடிமை பொருள் வழங்கல் அலுவலகம், நாமக்கல் மற்றும் திரு. மு. வெங்கடேசன், உதவிப் பொறியாளர், AE / O&M/ வலையப்பட்டி அலுவலகம், 110/22KV, துணை மின் நிலைய வளாகம், வளையப்பட்டி, மோகனூர் தாலுகா, நாமக்கல் மாவட்டம் மற்றும் குழுவினருடன் 23.10.2024 மாலை 16.00 மணிக்கு திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரி செல்லும்

தென்வடல் சாலையில் மேற்குபுறம் திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையத்திற்கு தெற்கு புறமாக உள்ள அண்ணா சிலைக்கு மேற்குபுறமாக கிழக்கு பார்த்தவாறு இயங்கி வரும் திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்தின் வெளிப்பகுதி, தரைதளத்தில் உள்ள வராண்டா, சார்பதிவாளர் அறை, உதவியாளர் அறை, கணினி அறை அலுவலர்கள் அறைகளில் உள்ள யாரும் வெளியே செல்லாமல் காவலர்கள் மூலம் காப்பு போடப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே நுழைந்து அந்த அறையின் கிழக்கு நோக்கி சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் நான் என்னையும் என்னுடன் வந்திருந்த குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு, நாங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்ய வந்திருப்பதாக தெரிவித்து, அவரிடம் விசாரிக்க அவர் தனது பெயர் ரா. முத்துசாமி என்றும், தான் உதவியாளர் என்றும் சார்பதிவாளராக கூடுதல் பொறுப்பில் கடந்த 29.12.2022 ஆம் தேதிமுதல் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். அப்போது திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர்கள் திருமதி. கு. தங்கமணி, திருமதி. அம்பிகாபதி, இளநிலை உதவியாளர்கள் திருமதி. தங்கம்மாள், திரு. அரவிந்தன், அலுவலக உதவியாளர் திரு. மனோகரன், பதிவறை எழுத்தர் திரு. பெ. கோபாலகிருஷ்ணன், குறுந்தகடு பணியாளர்கள் அ. நித்யா, தகவல் தொகுப்பு பணியாளர்கள் திருமதி. மா. கலைவாணி மற்றும் திருமதி. ஈஸ்வரி ஆகிய அலுவலர்கள் பணியில் இருந்தனர். அனைத்து அலுவலர்களும் அவரவர் இருக்கையில் அமர வைக்கப்பட்டனர். அலுவலகத்தில் இருந்த எழுத்தர்கள் / புரோக்கர்கள் ஆகியோர் அடையாளம் காணப்பட்டு அறையில் அமர வைக்கப்பட்டனர்.

அலுவலகத்தில் இருந்த மற்ற பொதுமக்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அனுப்பப்பட்டனர். பின்னர் சோதனைக் குழுவினரால் சார்பதிவாளரின் இருக்கை முழுவதையும் சோதனை செய்யப்பட்டது. அப்போது சார்பதிவாளரிடம் அன்றைய தினம் அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட தொகை விபரங்கள் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு அவர் 23.10.2024 ஆம் தேதி மாலை 16.00 மணிவரை மொத்தம் 78 டோக்கன்கள் எண்கள் இணையவழியில் முன்பதிவு செய்யப்பட்டது என்றும் அதில் நிலுவை ஆவணங்களுடன் சேர்த்து 46 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது என்றும், ஆவண எண்கள் 8820 முதல் 8860 வரை 46 ஆவணங்களில் புத்தகம் எண்.1 ல் 41 ஆவணங்களும், புத்தகம் எண்.4 ல் 1 ஆவணமும், நிலுவையில் 4 ஆவணங்களும் பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றும், புத்தகம் எண்.1 ல் பதிவு செய்யவேண்டிய ஆவணங்கள் 10 ஆவணங்கள் பதிவு செய்யப்படாமல் உள்ளதாக தெரிவித்தார். அது தொடர்பான கணினி பிரிண்ட் எடுக்கப்பட்டு அது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதற்கான A கணக்கு தலைப்பில் இணையதளம் மூலமாக ரூ.6,66,706/– ம், Point of Service (POS) தொகையாக ரூ. 700/– ம் வசூல் செய்யப்பட்டதாகவும், மேலும் D கணக்கு தலைப்பில் இணையதளம் மூலமாக ரூ.10,023/– தொகையும் வசூல் செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். மேற்படி தொகைகளுக்கு உண்டான அன்றைய தினம் போடப்பட்ட இரசீதுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் சரியாக இருந்தது. மேலும் நிரந்தர முன்பணம் பையை சோதனை செய்து பார்க்கையில் அதில் ரூ. 250/– இருந்தது. அதை தொகுதி எண். 7 நிலையான முன்பண பதிவேட்டின் பதிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க அது தொடர்பான விவரங்கள் பதிவு செய்யப்படவில்லை. அந்தப் பதிவேடானது 20.12.2020 க்குப் பின்னர் பாரமரிக்கப்படவில்லை. மேற்படி நிலையான முன்பணம் சார்பதிவாளர் பொறுப்பு அவர்களிடம் சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திருச்செங்கோடு சார்பதிவாளரின் இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் காணப்படவில்லை. பின்னர் சார்பதிவாளர் பொறுப்பு திரு. முத்துசாமி அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.940/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.17 பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பக்கம் 84 ல் பதிவு செய்து ஒரு கவரில் போட்டு பெயர் எழுதி சார்பதிவாளர் மேஜையின் மீதுள்ள சிறிய பெட்டியில் வைத்துள்ளதாக தெரிவித்து அதை எடுத்து ஆஜர் செய்தார். அதை சரிபார்க்க அந்தப்பணம் குறித்த பதிவு சரியாக இருந்ததால் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு. அ. அரவிந்தன் அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.550/ காணப்பட்டது. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ. 550/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.17 பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பக்கம் 84 ல் பதிவு செய்துவிட்டு அந்த பணத்தை தான் வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை சரிபார்த்தபோது அந்தப்பணம் குறித்த பதிவு

சரியாக இருந்ததால் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திருமதி. தங்கம்மாள் அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.580/ காணப்பட்டது. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ. 580/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.17 பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பக்கம் 84 ல் பதிவு செய்துவிட்டு அந்த பணத்தை தான் வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை சரிபார்த்தபோது அந்தப்பணம் குறித்த பதிவு சரியாக இருந்ததால் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக உதவியாளர் திரு. கோ. மனோகரன் அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.240/ காணப்பட்டது. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ. 240/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.17 பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பக்கம் 84 ல் பதிவு செய்துவிட்டு அந்த பணத்தை தான் வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை சரிபார்த்தபோது அந்தப்பணம் குறித்த பதிவானது ரூ.140/– என இருந்தது பற்றி அவரிடம் கேட்டபோது அவர் இன்று காலையில் பதிவு மேற்கொண்டபோது ரூ. 240/– க்கு பதிலாக ரூ.140/– என்று தவறுதலாக எழுதிவிட்டதாக கூறினார். அதன் பின்னர் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் பதிவரை எழுத்தர் திரு. பே. கோகுலகிருஷ்ணன் அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.1,100/ காணப்பட்டது. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ. 1,100/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.17 பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பக்கம் 84 ல் பதிவு செய்துவிட்டு அந்த பணத்தை தான் வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை சரிபார்த்தபோது அந்தப்பணம்

குறித்த பதிவானது சரியாக இருந்தது. அதன் பின்னர் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி. கலைவாணி அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.330/ காணப்பட்டது. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ. 330/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.17 பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பக்கம் 84 ல் பதிவு செய்துவிட்டு அந்த பணத்தை தான் வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை சரிபார்த்தபோது அந்தப்பணம் குறித்த பதிவானது சரியாக இருந்தது. அதன் பின்னர் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை. பின்னர் பொறுப்பு சார்பதிவாளரை உடன் அழைத்துக் கொண்டு தெற்கு பக்கம் உள்ள சார்பதிவாளர் அன்றாட ஆவண பாதுகாப்பு அறையில் சந்தேகத்தின்பேரில் சோதனையிடப்பட்டது. அந்த அறையில் மேற்கு பக்க சுவரில் வடமேற்கு மூலையில் கிழக்கு பார்த்தவாறு ஒரு இரும்பு பீரோ உள்ளது. அந்த பீரோவிற்கு பின்புறம் மேற்கு பக்க சுவற்றின் ஓரமாக ரூபாய் நோட்டுக்கள் இறைந்து காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை சாட்சிகள் முன்னிலையில் எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் மூன்று இருநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.600/–ம், ஒரு ஐநூறு ரூபாய் நோட்டு ஆக ரூ.500/– ம் ஆக மொத்தம் ரூ.1,100/– காணப்பட்டது. அந்த தொகை குறித்து சார்பதிவாளர் பொறுப்பு திரு. முத்துச்சாமியிடம் கேட்டபோது அவர் தனக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். மேலும் அந்த பணம் எவ்வாறு அங்கு வந்தது என்ற விவரம் தெரியாது என்றும் கூறினார். மற்ற அலுவலர்களிடமும் கேட்டபோது அந்த பணம் அங்கு எவ்வாறு வந்தது என்று தெரியவில்லை என்று கூறினார். எனவே அந்த தொகை ரூ.1,100/– சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். அது தொடர்பாக திரு. முத்துச்சாமி அவர்களை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அலுவலக அறையின் வடக்கு பக்கம் உள்ள உதவியாளர் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கு

இடமான வகையில் பணமோ அல்லது பொருளோ காணப்படவில்லை. பின்னர் பொறுப்பு சார்பதிவாளர் அவர்களை அழைத்துக் கொண்டு அந்த அறைக்கு வடக்கு பக்கம் கண்ணாடியால் தடுக்கப்பட்டிருந்த கணினி அறைக்குள் சென்று அந்த அறை முழுவதும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ பொருளோ காணப்படவில்லை. அதன் பின்னர் அந்த அறையில் பணிபுரியும் தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி. ப. ஈஸ்வரி அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.680/ காணப்பட்டது. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ. 680/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.17 பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பக்கம் 84 ல் பதிவு செய்துவிட்டு அந்த பணத்தை தான் வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை சரிபார்த்தபோது அந்தப்பணம் குறித்த பதிவானது சரியாக இருந்தது. அதன் பின்னர் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் குறுந்தகடு பணியாளர் திருமதி. அ. நித்யா அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் ரூ.230/ காணப்பட்டது. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ. 230/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.17 பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பக்கம் 84 ல் பதிவு செய்துவிட்டு அந்த பணத்தை தான் வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை சரிபார்த்தபோது அந்தப்பணம் குறித்த பதிவானது சரியாக இருந்தது. அதன் பின்னர் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திருமதி. கு. தங்கமணி அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் காணப்படவில்லை. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ. 530/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.17 பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பக்கம் 84 ல் பதிவு செய்து ஒரு கவரில் போட்டு பெயர் எழுதி சார்பதிவாளர் மேஜையின் மீதுள்ள சிறிய பெட்டியில் வைத்துள்ளதாக தெரிவித்து அதை எடுத்து ஆஜர் செய்தார். அதை சரிபார்க்க

அந்தப்பணம் குறித்த பதிவு சரியாக இருந்ததால் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திருமதி. க. அம்பிகாவதி அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் காணப்படவில்லை. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ. **530/–** கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.**17** பணியாளர் ரொக்க இருப்பு பதிவேட்டில் பக்கம் **84** ல் பதிவு செய்து ஒரு கவரில் போட்டு பெயர் எழுதி சார்பதிவாளர் மேஜையின் மீதுள்ள சிறிய பெட்டியில் வைத்துள்ளதாக தெரிவித்து அதை எடுத்து ஆஜர் செய்தார். அதை சரிபார்க்க அந்தப்பணம் குறித்த பதிவு சரியாக இருந்ததால் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை.

பின்னர் சோதனைக் குழுவினரால் திடீர் சோதனையின் தொடர்ச்சியாக சார்பதிவாளர் அலுவலகத்தின் கீழ்க்கண்ட ஆவணங்கள் பார்வையிடப்பட்டது/கைப்பற்றப்பட்டது.

- திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகம், **வருகைப்பதிவேடு 01.01.2024** முதல் **31.12.2024** வரை தொகுதி எண்.**137** பார்வையிடப்பட்டது. அதில் பக்கம் **10**ல் அக்டோபர் **2024** மாதத்திய வருகைபதிவேட்டில் சார்பதிவாளர் பொறுப்பு திரு. இரா. முத்துசாமி மற்றும் இதர அலுவலர்கள் **23.10.2024** ஆம் தேதி சுருக்கொப்பங்கள் செய்துள்ளனர். பக்கம் **1** முதல் **6** முடிய உள்ள சான்று செய்யப்பட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

- திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகம், **TCS பணியாளர் வருகைப் பதிவேடு** நாள் **01.01.2024** முதல் **31.12.224** வரை தொகுதி எண்.**138** ல் பக்கம் எண்.**18** மற்றும் **19** பார்வையிடப்பட்டது. அதில் அக்டோபர் **2024** மாதத்திய வருகை பதிவேட்டில் தகவல் தொகுப்பு பணியாளர்கள் மா. கலைவாணி, ப. ஈஸ்வரி, குறுந்தகடு

பணியாளர் அ. நித்யா ஆகியோர் **23.10.2024** ஆம் தேதி சுருக்கொப்பம் செய்துள்ளனர். பக்கம் **1** முதல் **6** முடிய உள்ள சான்று செய்யப்பட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. .

- திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகம், **பணியாளர் ரொக்க இருப்பு பதிவேடு** நாள் **01.01.2024** முதல் **31.12.2024** முடிய தொகுதி எண். **17** பார்வையிடப்பட்டது. அதில் பக்கம் **85** ல் **23.10.2024** ஆம் தேதி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது. பக்கம் **1** முதல் **6** முடிய உள்ளவை சான்று செய்யப்பட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
- திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகம், **மதிப்பு நிர்ணயப்பதிவேடு** நாள் **01.01.2024** முதல் **– – – –** வரை தொகுதி எண். **12** பார்வையிடப்பட்டது. அதில் பக்கம் **01** முதல் **22** முடிய உள்ளவை சான்று செய்யப்பட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
- கணியியில் பிரிண்ட் செய்யப்பட்ட **"A"** கணக்கு பார்வையிட்டதில் இன்றைய தினம் **23.10.2024** ஆம் தேதி ஆவண எண்கள். **8820/24** முதல் **8860/24** முடிய **41** ஆவணங்கள் புத்தகம் **1**லும், ஆவண எண்.**57** புத்தகம் **4**லும், நிலுவை ஆவண எண்கள் **169** முதல் **172** முடிய **4** ஆவணங்கள், பக்கம் **1** முதல் **8** முடிய கைப்பற்றப்பட்டது.
- கணினியில் பிரிண்ட் செய்யபட்ட **டி கணக்கு** பட்டியலை பார்வையிட்டதில் இன்று **23.10.2024** ஆம் தேதி **20** வில்லங்க சான்றிதழ், **13** நகல் மனுக்கள், ஆக மொத்தம் **33** இணைய வழி மற்றும் நேரடியாக மனு செய்த விவரங்கள் உள்ளது. பக்கம் **1** முதல் **6** முடிய உள்ளது கைப்பற்றப்பட்டது.
- கணினியில் பிரிண்ட் செய்யபட்ட **எச் கணக்கு** பட்டியலை பார்வையிட்டதில் இன்று **23.10.2024** ஆம் தேதி "A" கணக்கில் ரூ.**6,66,706/–** ம், டி கணக்கில் ரூ.**10,023/–**, குறுந்தகடு ரூ.**4,600/–**, உட்பிரிவு ரூ.**9,000/–** இ.மு.ச.பிரிவு **41** ரூ.**8,51,981/–** மொத்தமாக ரூ.**15,48,210/–** ஆகும் பக்கம் **1** மற்றும் **2** விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.
- கணினியில் பிரிண்ட் செய்யபட்ட **Sub Division Account கணக்கு** பட்டியல் பக்கம் **1** மற்றும் **2** விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.

- கணினியில் பிரிண்ட் செய்யபட்ட **குறுந்தகடு கணக்கு** பட்டியல் பக்கம் 1 முதல் 4 முடிய விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.
- கணினியில் பிரிண்ட் செய்யபட்ட **ஆவண எழுத்தர் நல நிதி** கணக்கு பட்டியல் பக்கம் 1 முதல் 6 முடிய விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.
- தன்பதிவேடு தொகுதி எண். 131 பார்வையிடப்பட்டது. அப்பதிவேட்டில் கடைசி பக்கம் 303 ல் வரிசை எண். 795 ல் நடப்பு எண்.914 என்று குறிப்பிட்டு இறுதியாக 13.09.24 தேதி குறிப்பிட்டு பதிவுகள் உள்ளது.
- தன்பதிவேடு தொகுதி எண் குறிப்பிடப்படாமல் உள்ளது பார்வையிடப்பட்டது. அப்பதிவேட்டில் பக்கம் 037 ல் வரிசை எண் குறிப்பிடாமல் நடப்பு எண்.1071 என்று குறிப்பிட்டு இறுதியாக 23.10.24 தேதி குறிப்பிட்டு பதிவுகள் உள்ளது.
- நிலையான முன்பண பதிவேடு தொகுதி எண்.7, நாள் 01.07.2020 முதல் பார்வையிடப்பட்டது.

அதன் அச்சு நகல் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் பொறுப்பு திரு. முத்துசாமி அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு தொடர் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட பதிவேடுகள் அனைத்தும் பார்வையிட்டதற்கு அடையாளமாக சம்பந்தப்பட்ட பக்கங்களில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். மேலும் சார்பதிவாளர் பொறுப்பு அவர்களிடம் கொடிநாள் நிதி வசூல் இலக்கு குறித்து கேட்டபோது, ஆவண பதிவுக்கு வரும் பொதுமக்கள் நேரடியாக செலுத்துவதற்கு என்று www.flagday.gov.in என்ற இணையதளம் மூலமாக நேரடியாகச் செலுத்துவதால் தற்பொழுது தனியாக கொடிநாள் நிதி வசூலுக்கு என்று ஆவணங்கள் எதுவும் பராமரிக்கப்படுவதில்லை என்று தெரிவித்தார். மேலும் சோதனையின்போது எனக்கு திருச்செங்கோடு பத்திரபதிவு அலுவலகத்திற்கு எதிர் புறத்தில் உள்ள நரசிம்மா காம்ளக்சில் திரு. வெங்கடேசன், ஆவண எழுத்தர் E-mail : svdocument89@gmail.com என்பவர் திருச்செங்கோடு பத்திர பதிவு அலுவலகத்தில் பத்திர பதிவு செய்வதற்காக ஆவணங்கள் தயார்செய்தும், பத்திர பதிவின்போது பத்திர பதிவிற்காக சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு அதிகப்படியான லஞ்சதொகையை பொதுமக்களிடமிருந்து வசூல் செய்து அந்த தொகையை அலுவல் நேரம் மற்றும் அலுவலக பணி நேரம் முடிந்த பின்னர் அவர்களிடம் கொடுப்பதாகவும் கிடைத்த நம்பத்தகுந்த இரகசிய தகவலின் பேரில் சோதனைக் குழுவில் இருந்து ஒரு காவலரை அந்த அலுவலகத்திற்கு காப்பு

நியமிக்கப்பட்டது. அதன் பின்னர் பொறுப்பு சார்பதிவாளர் திரு. முத்துசாமி அவர்களை அழைத்துக் கொண்டு பார்வையாளர்கள் அறைக்கு செல்லப்பட்டது. அங்கு ஏற்கனவே அமர வைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் **க. அன்பழகன்** என்றும், தான் டிரைவராக வேலை செய்து வருவதாகவும், தனது மனைவி பெயரில் உள்ள காலிமனையில் வீடு கட்டுவதற்காக தனக்கு தெரிந்த நபர்களிடம் கடனாக ரூ.4 லட்சம் பெற்றிருந்ததாகவும், அந்த கடன் தொகைக்கு வட்டி அதிகமாக இருந்ததால் ஈரோடு பைவ் ஸ்டார் சொத்துக் கடன் நிதி நிறுவனத்தில் தனது மனைவி பெயரில் குறைந்த வட்டியில் கடனாக ரூ.4 லட்சம் பெற்று வெளியில் வாங்கிய கடனை அடைக்க முடிவு செய்து தனது மனைவி பெயரில் குறைந்த வட்டியில் கடனாக ரூ.4 லட்சம் பெற முடிவு செய்து அடமான கடன் பத்திரம் பதிவு செய்வதற்காக தானும் தனது மனைவியும் இன்று 23.10.24 மதியம் சுமார் 12.00 மணிக்கு திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகம் வந்து காத்திருந்ததாகவும் கூறினார். சோதனைக்குழுவினர் அவரை விசாரித்து அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது தனது பேண்டின் வலது பக்க பின்பாக்கெட்டிலிருந்து பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 19 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக மொத்தம் ரூ.9,500/– இருந்தது பற்றி அவரிடம் விசாரித்தபோது அந்த பணம் பத்திர பதிவு செய்வதற்காக பதிவுத் தொகையை நிதிநிறுவன வழக்கறிஞர் அவரது வங்கிக் கணக்கிலிருந்து செலுத்தியதால் பத்திரபதிவு முடித்த பின்னர் அவரது வழக்கறிஞருக்கு கொடுப்பதற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை ரூ.9,500/– சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு. அன்பழகனை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு அங்கு ஏற்கனவே அறையில் அமர வைக்கப்பட்டிருந்தவர்களில் மற்றொருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் **சி.அரசு** என்றும், தான் வையப்பமலையைச் சேர்ந்த தனது சித்தப்பா மகன் சேகர் என்பவர் திருச்செங்கோடு சின்னத்தம்பிபாளையத்தைச் சேர்ந்த சந்திரன் என்பவரிடம் வீட்டுடன் சேர்ந்த 2 காலிமனை இடத்தை வாங்குவதற்கு சாட்சியாக கையொப்பம் செய்ய 23.10.2024 ஆம் தேதி மதியம் 2.00 மணியளவில் தம்பி சேகருடன் திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும், பின்னர் பத்திரத்தில் சாட்சி

கையொப்பம் செய்த பின்னர் பத்திரப்பதிவு முடித்து பத்திரத்தை வாங்குவதற்காக காத்துக்கொண்டிருந்ததாகவும் கூறினார். சோதனையில் திரு.அரசுவிடம் விசாரணையின்போது அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது சட்டையின் இடதுபக்க மேல் பாக்கெட்டில் இருந்து கத்தையாக தொகையை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 24 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.12,000/– இருந்தது. மேற்படி தொகை வைதிருந்ததற்கு காரணம் கேட்டபோது அந்தப்பணம் மளிகை பொருட்கள் வாங்குவதற்கு வைத்துள்ளதாக அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை ரூ.12,000/– சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு. அரசுவை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு அங்கு ஏற்கனவே அறையில் அமர வைக்கப்பட்டிருந்தவர்களில் மற்றொருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் **லோகநாதன்** என்றும், தனது மாமனாருக்குச் சொந்தமான பணம் ரூ.10 லட்சம் அவரது வங்கி கணக்கில் இருந்தது என்றும், அந்த பணத்தை வங்கியிலிருந்து பெற்று தனது மனைவியின் மூத்த அக்காவான கற்பகவல்லி என்ற கல்பனா பெயரில் ஊட்டியில் உள்ள SBI வங்கியில் இட்டு வைப்பு செய்திருந்தனர் என்றும், அந்த பணத்தில் இடம் வாங்கலாம் என்று முடிவு செய்து திருச்செங்கோடு, காடச்சநல்லூர் அருகில் திரு. வெங்கடாசலம் என்பவரின் 1575 சதுர அடி காலிமனை நிலத்தை ரூ.10 லட்சத்து நாற்பதாயிரத்திற்கு வாங்க முடிவு செய்து மனைவியின் இரண்டாவது அக்கா காயத்திரி, மூன்றாவது அக்கா நளினி ஆகியோர் வெளியூரில் இருப்பதால் அந்த நிலத்தை மூத்த அக்கா கல்பனா மற்றும் எனது மனைவி பிரியா ஆகியோர் பெயரில் பத்திரபதிவு செய்து முடித்துள்ளதாகவும், அதன்படி தனது மனைவியின் அக்கா கல்பனா வங்கி கணக்கில் உள்ள 11 லட்சம் ரூபாயை தனது வங்கி கணக்கிற்கு அனுப்பியதை தான் எடுத்துக் கொண்டதாகவும், கடந்த 2 நாட்களுக்கு முன்பு அந்த நில உரிமையாளர் ஏற்கனவே பத்திரத்தை அடமானத்திருந்து மீட்க அந்த பணத்தில் இருந்து ரூ.5 லட்சம் கொடுத்து பத்திரத்தை தான் பெற்றுக்கொண்டதாகவும், அதன் பின்னர் அந்த நிலத்தை தனது மனைவி மற்றும் அவரது அக்கா பெயரில் பத்திர பதிவு செய்ய டோக்கன் எண்.36 பெற்றும், நிலத்தை விற்பவருக்கு மீதி தரவேண்டிய ரூ.5 லட்சத்தை பத்திரப்பதிவு முடிந்த பின்னர் நிலத்தை விற்பவருக்கு மீதி தரவேண்டிய 5 லட்சம் ரூபாய் பணத்தை

பத்திரப்பதிவு முடித்த பிறகு கொடுக்கலாம் என்று தனக்கு சொந்தமான ஹோண்டா ஆக்டிவா TN 43 D 5306 என்ற இருசக்கர வாகனத்தில் லாக்கரில் வைத்து சார்பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே நிறுத்திவிட்டு பத்திரபதிவிற்காக காத்திருந்ததாகவும் தெரிவித்தார். சோதனையின்போது அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் அவரது சட்டையின் இடது பக்க மேல்பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை சாட்சிகளின் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 19 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தது. அந்த தொகை வைத்திருந்ததற்கு அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை ரூ.9,500/– சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு. லோகநாதனை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு அங்கு ஏற்கனவே அறையில் அமர வைக்கப்பட்டிருந்தவர்களில் மற்றொருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் **பிரபு** என்றும், தான் சொந்தாக 12 விசைத்தறிகள் வைத்து தொழில் செய்து வருவதாகவும், குமரன் கார்டனில் உள்ள 1346 சதுர அடி கொண்ட பிளாட் எண்.26 ஐ தனது பெயரில் வாங்குவதற்கு முடிவு செய்து முரளி என்ற பத்திர எழுத்தரிடம் ஏற்பாடு செய்ய கூறியிருந்ததாகவும், அதன்பேரில் அன்று தானும் தனது தம்பி தினேஷ்குமாரும் பிளாட் ஓனர்களுடன் சேர்ந்து மதியம் சுமார் 2.00 மணிக்கு பத்திர எழுத்தர் முரளி அவலுவலகம் சென்று பதிவு செய்வதற்கான பத்திரத்தை பெற்றுக்கொண்டு திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும் கூறினார். சோதனையில் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் அவரது சட்டையின் இடது பக்க மேல்பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை சாட்சிகளின் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 19 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தது. அந்த தொகை வைத்திருந்ததற்கு அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை ரூ.9,500/– சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு. பிரபுவை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு அங்கு ஏற்கனவே அறையில் அமர வைக்கப்பட்டிருந்தவர்களில் மற்றொருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் **ரஞ்சித்குமார்** என்றும், தான் சேலத்தில் உள்ள அட்வகேட் மணிமாறன் அவர்களின் சிவம் அசோசியேட்ஸ் அலுவலகத்தில் உதவியாளராக

பணியாற்றிவருவதாகவும், அட்வகேட் தயாரிக்கும் அடமான பத்திரங்களை சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சென்று பத்திர பதிவு மேற்கொள்ள ஏற்பாடு செய்வதாகவும், அதன்பேரில் திருச்செங்கோட்டைச் சேர்ந்த திருப்பதி என்பவர் சேலத்தில் வீட்டு கடன் பெறுவதற்காக எங்களது அட்வகேட் மணிமாறன் அவர்களால் தயார் செய்யப்பட்டு அவரால் கையொப்பம் செய்த வீட்டு அடமானக்கடன் பத்திரத்துடன் திருப்பதி அவர்களுடன் **23.10.2024** ம் தேதி மாலை **3.00** மணியளவில் திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகம் வந்து காத்துக்கொண்டிருந்ததாகவும் கூறினார். சோதனையில் அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் அவரது பேண்டின் வலது பக்க முன் பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை சாட்சிகளின் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் **98** ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.**49,000/–** ம் மற்றும் **2** நூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.**200/–** ஆக மொத்தம் ரூ.**49,200/–** இருந்தது. அந்த தொகை வைத்திருந்ததற்கு அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லாத காரணத்தால் அந்த தொகை ரூ.**49,200/–** சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.ரஞ்ஜித்குமாரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் அந்த பார்வையாளர் அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு பணமோ பொருளோ காணப்படவில்லை. பின்னர் சார்பதிவாளரை அழைத்துக் கொண்டு அலுவலகத்தின் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அலுவலர்களின் இரு சக்கர வாகனங்கள் மற்றும் சார்பதிவாளரின் TN 55 AQ 0551 என்ற பதிவெண் கொண்ட Hyundai i20 என்ற காரிலும் சோதனை செய்தபோது அங்கு பணமோ பொருளோ காணப்படவில்லை. பின்னர் சார்பதிவாளரை அழைத்துக்கொண்டு அலுவலகத்தின் அறைக்கு வந்தும், அதன் பின்னர் சார்பதிவாளர் மற்றும் சாட்சிகளுடன் அலுவலகத்தின் முதல் தளத்திற்குச் சென்று வடக்கு பார்த்துள்ள ஆவண பதிவறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு பணமோ பொருளோ எதுவும் காணப்படவில்லை. சோதனையின்போது திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் திரு. பெருமாள் என்பவரை அன்றாடம் டீ, காப்பி, போன்றவைகள் வாங்குவதற்கு என்று தனியாக சார்பதிவாளரால் நியமிக்கப்பட்டு மேலும் அலுவலக கோப்புக்களை கையாள்வதற்கு

அனுமதித்தும் அதற்கென தனியாக கூலி கொடுத்து வருவதாக தெரிகிறது. இந்த திடீர் சோதனையானது 24.10.2024 ஆம் தேதி 02.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

பின்னர் மேற்படி சார்பதிவாளர் அலுவலக திடீர் தணிக்கை முடிந்தவுடன் திருச்செங்கோடு, மேற்குரத வீதி, நரசிம்மா காம்ப்ளக்ஸ் முதல் மாடியில் இயங்கிவரும் **திரு.S.வெங்கடேசன்**, முன்னாள் பத்திர எழுத்தர் என்பவரது அலுவலகத்திற்கு அரசு சாட்சிகளுடன் சென்றேன். அங்கு அலுவலகத்தில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.S.வெங்கடேசன் த/பெ. சுப்பிரமணியன் என்றும், தான் முன்னாள் பத்திர எழுத்தர் என்றும், தான் கடந்த 1991-ம் ஆண்டு முதல் பத்திர எழுத்தராக உரிமம் பெற்று தொழில் செய்து வந்ததாகவும், நாமக்கல் மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறையால் திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் 2020-ம் ஆண்டில் நடந்த திடீர் சோதனையின்போது அங்கிருந்த தன்னிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ரூ.2500/-க்கு சரியான விளக்கம் சொல்லாததால் அதன்பேரில் அவர்மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அவருடைய பத்திர எழுத்தர் உரிமம் கடந்த 2021-ஆம் ஆண்டு பதிவுத்துறை டி.ஐ.ஜி. அவர்களால் ரத்து செய்யப்பட்டதாகவும், அதன் பின்னர் தான் அதே அலுவலகத்தில் இன்றைய தேதி வரை பத்திரம் டைப் செய்து கொடுக்கும் பணிகளை அலுவலகத்தில் 5 நபர்களை வைத்து செய்து கொடுத்து வருவதாகவும், தான் டைப் செய்யும் பத்திரங்களை தனது அலுவலகத்தில் வேலைக்கு அமர்த்தியிருக்கும் அட்வகேட் திரு.ராஜகோபால் அவர்கள் அத்தாட்சி செய்து, அதன்பேரில் அவர் மூலமாகத்தான் பத்திரப்பதிவு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பத்திரம் கிரையம் செய்பவர்கள் பத்திரப்பதிவுக்கான முத்திரைக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தை இ-பேமெண்டில் செலுத்த வேண்டும் என்பது நடைமுறை என்றும், சில நபர்கள் மேற்படி கட்டணத்தொகைகளை தன்னிடம் ரொக்கமாக கொடுத்து விடுவார்கள் என்றும், தான் அந்த தொகைகளை அவரது வங்கிக் கணக்கில் செலுத்தி பின்னர் அவர்களின் பெயர்களில் ஆன்லைனில் செலுத்திவிடுவதாக தெரிவித்தார். மேற்படி பதிவுத்துறை டி.ஐ.ஜி. அவர்களால் அவரது உரிமம் ரத்து செய்த பின்னரும் அவரது ஆபீசின் முன்பு "S.வெங்கடேசன், ஆவண எழுத்தர்" என பெயர் பலகை வைத்திருந்தார். அதைப்பற்றி நான் விளக்கம் கேட்டபோது, அவரது உரிமம் ரத்து சம்மந்தமாக மேல்முறையீடு சென்றுள்ளதால் தனக்கு சாதகமாக தீர்ப்பாகி உரிமம் திரும்பக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் மேற்படி தனது பெயர் பலகையை

எடுக்காமல் இருந்துவிட்டதாகவும், அதை உடனே எடுத்துவிடுவதாகவும் சொன்னார். மேலும் அவரது அலுவலகத்தில் இருந்த ”S.வெங்கடேசன், ஆவண எழுத்தர், நரசிம்மா காம்ப்ளக்ஸ், மேற்கு ரத வீதி, அண்ணா சிலை அருகில், திருச்செங்கோடு-637211 E-mail: svdocument89@gmail.com T.V.சுப்ரமணியன் & சன்ஸ் 98427-14288, 98424-14288, 99655-14288” என்று தமிழிலும், அதன் பின்புறத்தில் இதே விபரங்கள் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டுள்ள விசிட்டிங் கார்டை பற்றி அவரிடம் விளக்கம் கேட்டபோது, அது தனது உரிமம் ரத்து செய்வதற்கு முன்பே அச்சடிக்கப்பட்ட விசிட்டிங் கார்டு என்று சொன்னார். நான் மேற்படி விசிட்டிங் கார்டை விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பின்னர் சந்தேகத்தின் அடிப்படையில் அவரது அலுவலக அறையை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனையிட்டேன். அப்போது திரு.வெங்கடேசன் தான் அமர்ந்திருந்த அவரது ஆபீஸ் டேபிள் வலது பக்க டிராயரில் 10 தனித்தனி கத்தைகளாக பணம் இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்கையில் முறையே ரூ.34,500/-(Rs.500 x 69), ரூ.5,600/-(Rs.500 x 8, Rs.200 x 2, Rs.100 x 12), ரூ.14,300/- (Rs.500 x 13, Rs.100 x 78) , ரூ.8,520/-(Rs.500 x 1, Rs.200 x 4, Rs.100 x 72, Rs.20 x 1), ரூ.38,000/- (Rs.200 x 190), ரூ.50,000/- (Rs.500 x 100), ரூ.50,000/- (Rs.500 x 100), ரூ.8,000/-(Rs.500 x 1, Rs.200 x 37, Rs.100 x 1), ரூ.11,000/- (Rs.500 x 22), ரூ.8,000/- (Rs.500 x 16) கத்தைகளாக ஆக மொத்தம் ரூ.2,27,920/- இருந்தது. மேற்படி தொகைகள் குறித்து நான் அவரிடம் விசாரித்த போது, அந்த தொகைகள் பத்திரம் கிரையம் செய்பவர்கள் பத்திரப்பதிவுக்கான முத்திரைக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தை இ-பேமெண்டில் செலுத்துவதற்கு கடந்த ஒருவார காலமாக தன்னிடம் ரொக்கமாக கொடுத்த தொகைகள் என்று சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், மேலும் ஆவண எழுத்தர் உரிமம் இல்லாத நிலையில் திரு.வெங்கடேசன் தனது அலுவலகத்தில் இவ்வளவு பணம் வைத்திருந்த விதம் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் ரூ.2,27,920/-ஐ நான் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பின்னர் அரசு சாட்சிகள் முன்னிலையில் திரு.வெங்கடேசன் மற்றும் அட்வகேட் திரு.மு.ராஜகோபால் ஆகியோரை விசாரித்து அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றுதல் மகஜர் 24.10.2024-ஆம் தேதி அதிகாலை 05.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள்/ எதிரிகள் உரிய விளக்கம் அளிக்காததாலும், அந்த தொகைகள் முறையற்ற வகையில், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதிபலனாகவோ அவர்களால் பெறப்படும் என்றும், எதிரிகள் கொண்டுவந்திருந்த தொகை சார்பதிவாளர் பொறுப்பு திரு. முத்துச்சாமி மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி உத்திரவு பெற்று மேற்படி எதிரிகள் 1 முதல் 7 வரையிலானவர்கள் மீது இன்று 25.10.2024 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.6/AC/2024, u/s 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w. 106 BNSS, 2023-ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், மற்றும் திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல், பதிவு செயயப்பட்ட வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை மாண்பமை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

25/10/24.

(மு. சுபாஷிணி)
துணைக் காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.